பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 07 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. துரந்த் கோப்பை கால்பந்து போட்டிக்கான கோப்பை பயண தொடக்க நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.
2. ரஷ்யா பயணத்தை முடித்துக் கொண்டு ஆஸ்திரியா சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.
3. இந்தியாவின் வளர்ச்சி விகிதம் ஆறு புள்ளி எட்டு சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தின் விக்கிரவாண்டி தொகுதி உட்பட நாடு முழுவதும் 13 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.
5. தென்னாப்பிரிவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டுவெண்டி –டுவெண்டி மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா பத்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை சமன் செய்தது.

<u>*--- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

துரந்த் கோப்பை கால்பந்து போட்டிக்கான கோப்பை பயண தொடக்க நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள கலாச்சார மையத்தில் இதற்கான நிகழ்ச்சி காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

133-வது துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டி இம்மாதம் 27-ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 31-ஆம் தேதி நரை நடைபெறவுள்ளது.

புகழ்பெற்ற இந்த போட்டியின் கோப்பை-க்கான அறிமுக விழா இன்று நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி தமது ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று இரவு ஆஸ்திரியா சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அந்நாட்டு அரசின் தலைவர் திரு கரீன் கேமர், பிரதமரை வரவேற்றார்.

பிரதமருக்கு ராணுவ அணுவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

திரு கரீன் கேமருடன், திரு நரேந்திரமோடி இன்று சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இது குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஆஸ்த்திரிய தலைவர்களுடனான தமது சந்திப்பை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும், அந்நாட்டுடனான இந்தியாவின் நட்புறவு எதிர்காலத்தில் மேலும் வலுவடையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவிலான ஒத்துழைப்புக்கு இந்தியாவும் - ஆஸ்திரியாவும் தொடர்ந்து பணியாற்றும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த பயணம் தமக்கு சிறப்பு வாய்ந்ததாகும் என்றும், ஆஸ்திரியாவுடன் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவது தொடர்பாக தாம் பேச்சு நடத்த இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அங்குள்ள இந்திய சமூகத்தினரையும் தாம் சந்தித்து கலந்துரையாட இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

41 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியா சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக மாஸ்கோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு ரஷ்யாவின் உயரிய விருதான **'St. Andrew the apostle** விருது வழங்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையேயான குறிப்பிட்ட நல்லுறவுகளை மேம்படுத்துவதற்கு பிரதமர் ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் இந்த விருதை அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புட்டின், திரு நரேந்திரமோடிக்கு வழங்கி கௌரவித்தார்.

ரஷ்ய அதிபருடனான தமது இந்த சந்திப்பின் மூலம் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகள் மேலும் வலுவடையும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

உக்ரைனுடனான போரை முடிவுக்குக் கொண்டுவர தீர்வு காண்பதற்கு பிரதமர் எடுத்து வரும் முயற்சிகளுக்காக ரஷ்ய அதிபர் திரு புட்டின் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இரு தலைவர்களும் 17 முறை சந்தித்து பேச்சு நடத்தி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இந்தியாவும் - ரஷ்யாவும் வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் அளவிலான வர்த்தக இலக்கை எட்ட ஒப்புதல் தெரிவித்துள்ளன.

மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதித்துறை செயலாளர் திரு வினய் மோகன் குவாத்ரா, இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டதாகக் கூறினார்.

சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம், விண்வெளி ஆராய்ச்சி, முதலீடு, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் அந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

பிரஸார் பாரதி மற்றும் ரஷ்யாவின் நோவோஸ்டி தொலைக்காட்சி இடையே ஒளிபரப்பு தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் தலைவர்களின் சந்திப்பின்போது பொருளாதார ஒத்துழைப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதாகவும் திரு வினய் மோகன் குவாத்ரா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இந்தியாவின் வளர்ச்சி விகிதம் ஆறு புள்ளி எட்டு சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்திருப்பதாக பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அம்மாநில பிஜேபி நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய அவர், மற்ற வளர்ந்த நாடுகளின் வளர்ச்சி விகிதத்தைக் காட்டிலும் இது குறிப்பிடத்தக்க உயர்வாகும் என்று கூறினார்.

இதன்மூலம் நாட்டில் நிலையான வளர்ச்சி ஏற்பட்டு வருவது வெளிப்படையாக தெரிய வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் மூன்றாவது முறையாக ஆட்சி அமைந்ததற்கு கட்சித் தொண்டர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பே காரணம் என்றும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பாதுகாப்புத்துறையில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள அரசு உறுதி பூண்டிருப்பதாக அத்துறையின் செயலாளர் திரு கிரிதர் அரமனே தெரிவித்துள்ளார்.

தில்லியில் நடைபெற்ற பாதுகாப்பு உற்பத்திப் பொருட்கள் குறித்த கருத்தரங்கில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க சாதனையை எட்ட வேண்டியது அவசியம் என்று கூறினார்.

இதற்கு தொடர்புடைய அனைத்து அமைப்புகளும் உதவ வேண்டுமென்றும் திரு கிரிதர் அரமனே கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்திற்கான மத்திய சுகாதார அமைச்சகத்தின் முதன்மை ஆலோசகராக டாக்டர் சௌமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

காசநோய் ஒழிப்பு திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை டாக்டர் சௌமியா சுவாமிநாதன் வழங்குவார் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசநோய் ஆராய்ச்சி தொடர்பான ஆலோசனை, அதற்குத் தேவையான வழிமுறைகள், கொள்கை தொடர்பான முடிவுகள், காசநோய் ஒழிப்புத் திட்ட இலக்கை எட்டுதல் போன்ற விஷயங்களில் ஆலோசனை வழங்குவார் என அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை விஞ்ஞானியாகவும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநராகவும் டாக்டர் சௌமியா சுவாமிநாதன் பணியாற்றியுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி உட்பட நாடு முழுவதும் 13 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

காலை ஏழு மணிக்கு தொடங்கியுள்ள வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை நடைபெறும்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் நான்கு தொகுதிகளிலும், இமாச்சல பிரதேசத்தில் மூன்று தொகுதிகளிலும், உத்தராகாண்டில் இரண்டு தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

பீகார், மத்திய பிரதேசம். பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த தொகுதிகளில் பதிவாகும் வாக்குகள் வரும் சனிக்கிழமை எண்ணப்படுகின்றன.

[]<<<>>>[]

அனல் மின் நிலையங்களிலிருந்து வெளியாகும் சாம்பல் உள்ளிட்ட கழிவுப் பொருட்களை சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் மாற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக மத்திய நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அனல்மின் நிலையங்களின் உலர் சாம்பலை மறு பயன்பாட்டிற்குக் கொண்டுவர தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு சுற்றுச்சூழல் மாசு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்திருப்பதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

காலிஸ்தான் ஆதரவு அமைப்பான எஸ் எப் ஜே அமைப்புக்கான தடையை மத்திய அரசு மேலும் ஐந்து ஆண்டுகள் நீட்டித்துள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடை நீடிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசின் அறிவிக்கை தெரிவிக்கிறது.

அமெரிக்காவை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும் இந்த அமைப்பு, நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் இந்த தடை விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

நீட் தேர்வு முறைகேடு தொடர்பான வழக்கில் மேலும் இரண்டு பேரை சிபிஐ கைது செய்துள்ளது.

பீகார் மாநிலத்தின் நாலாந்தாவில் ஒருவரும், கயா மாவட்டத்தில் மற்றொருவரும் கைது செய்யப்பட்டதாக சி பி ஐ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[]<<<>>>[]

ஆந்திர மாநில மின்சார துறை தொடர்பான வெள்ளை அறிக்கையை அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு நேற்று அமராவதியில் வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எரிபொருள் உற்பத்தி வரி, மின்சாரத்திற்கான கூடுதல் வரி உள்ளிட்ட மக்களிடமிருந்து முந்தைய அரசு கூடுதல் கட்டணங்களை வசூலித்ததாகக் கூறினார்.

கட்டண உயர்வால் வீட்டு உபயோகத்திற்கான மின் கட்டணம் 45 சதவீதம் அதிகரிக்கப்பட்டதாகவும், 53 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மின் நிறுவனங்களுக்கான கடன் சுமை கடந்த ஐந்து ஆண்டுகளில் 79 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

[]<<<>>>[]

தலைநகர் தில்லியில் வடமேற்கு மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து ஒன்பது பெண் குழந்தைகள் உட்பட 23 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டது குறித்து தில்லி தலைமைச் செயலாளர் மற்றும் காவல்துறை ஆணையருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த விவகாரம் குறித்து இரண்டு வாரத்திற்குள் அறிக்கை அளிக்குமாறு ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையையும் தாக்கல் செய்யுமாறு மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

[]<<<>>>[]

சத்திஷ்கர் மாநிலம் காங்கர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் பெண் மாவோயிஸ்ட் தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்,

பினாகுண்டா வனப்பகுதியில் எல்லை பாதுகாப்புப் படையினர் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது இந்த மோதல் ஏற்பட்டதாகவும், பெண் தீவிரவாதியின் உடல் அங்கு கண்டெடுக்கப்பட்டதாகவும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

[]<<<>>>[]

தென்னாப்பிரிவுக்காக எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டுவெண்டி –டுவெண்டி மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா பத்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை சமன் செய்தது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் பேட் செய்த தென்னாப்பிரிக்கா 17 புள்ளி ஒரு ஓவரில் 84 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

85 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய மகளிர் அணி பத்து புள்ளி ஐந்து ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி வெற்றை இலக்கை எட்டியது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

**[]<<<>>>[]**

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரர் கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமூக வலைளத்தில் இதனை தெரிவித்துள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளர் திரு ஜெய் ஷா, ஏற்கனவே இப்பொறுப்பிலிருந்த ராகுல் டிராவிட்டுக்கு பதில் கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

***End of News***